(2020-21-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட (பக்கங்களின் எண்ணிக்கை : 2 )
மாணவ-மாணவியருக்கு மட்டும்) **SUBJECT CODE 20 UTM 613**

**REG.NO**

**vd.ஜி.எம்.கல்லூரி (தன்னாட்சி) :: பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : மே – 2023**

**பி.ஏ. – தமிழ் இலக்கியம்** **மதிப்பெண்கள் : 70**

**ஆறாவது பருவம்** **காலம் : 3 மணி நேரம்**

**பகுதி – 3**

**சங்க இலக்கியம் - எட்டுத்தொகை**

**பகுதி – அ** **(10 x 1 = 10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **(K1)**

1. பரதவர் எந்தத் திணையைச் சார்ந்தவர் ?

அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) நெய்தல்

2. செவிலித்தாய் அறத்தோடு நிற்பது யாருக்கு ?

அ) நற்றாய் ஆ) தலைவி இ) தோழி ஈ) தந்தை

3. எட்டுத்தொகையில் மிகக் குறைந்த அடிகளைக் கொண்ட நூல் எது?.

அ) நற்றிணை ஆ) குறுந்தொகை இ) ஐங்குறுநூறு ஈ) புறநானூறு

4. ’துஞ்சாக் கண்ணர்’ பரணர் கூறுவது?

அ) தாய் ஆ) நாய் இ) காவலர் ஈ) இளையர்

5. புறநானூற்றில் மிகுதியான பாடல்களைப் பாடிய புலவர் யார்?

அ) கபிலர் ஆ) பரணர் இ) கோவூர்கிழார் ஈ) . அவ்வையார்

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடை தருக.** **(K2)**

6. நான்காம் பத்தினைப் பாடியதால் காப்பியாற்றுக் காப்பியனார் பெற்ற பரிசுகள் யாவை ?

7. இருகரையிலும் மோதி வையை பெருக்கெடுத்து ஓடுவது எவ்வாறு உள்ளது?

8. “கோட்டினத்தாயர்கள்” குறிப்புரைக்க.

9. மடலேறும்போது இடம்பெறும் குறிப்புப் பொருட்கள் யாவை ?

10. “தொண்டிப்பத்தின்” தொடை முறையியல் யாது?

**பிரிவு – ஆ ( 5 x 4 = 20 மதிப்பெண்கள்)**

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.**

**(K3)**

11. அ) தலைவனை விட்டு தலைவி பிரிதலை அரிதாக்கும் காரணங்களை நற்றிணை பெருங்குன்றூர் கிழார் பாடல் வழி விவரிக்க

**(அல்லது)**

ஆ) “சிறு கோட்டுப் பெரும் பழம் தூங்கியாங்கு” எனும் கபிலரின் உவமையினை விளக்குக.

ETHICAL PAPER

*(த.பி.பா.)*



12. அ) தாய்க்கு உரைத்த பத்தின் கருத்துக்களைத் தொகுத்துரைக்க .

**(அல்லது)**

ஆ) “பண்பின் அங்கண் உடையவனாகத்” தலைவன் திகழும் விதத்தினை க் குறிஞ்சிக்கலியின் வழி ஆராய்க.

13. அ) “கரிகாலனுக்கு அஞ்சி மன்னர்கள் ஓடியதுபோல வாடைக்காற்றும் அஞ்சி ஓடும்” எனும் தலைவியின் கூற்றினை ப் பரணர் வழி நின்றுவிளக்குக .

**(அல்லது)**

ஆ) “உணவெனப் படுவது நிலத்தோடு நீரே”எனும் புறநானூற்றுப் பாடலை ஆராய்க.

14. அ) சேர மன்னர்களின் வழித்தோன்றல்களைப் பதிற்றுப்பத்தின் பாடல் கட்டமைப்பின் வழி விவரிக்க.

**(அல்லது)**

ஆ) பல்யானைச் செல்கெழு குட்டுவனின் சிறப்புகள் யாவை?

15. அ) வையையின் வருகையினையும் அதன்செயல்களையும் பரிபாடல் வழி விளக்குக.

**(அல்லது)**

ஆ) செவ்வேளின் பிறப்புத் தோற்றத்தினை பரிபாடல் வழி எடுத்துரைக்க.

**பிரிவு -இ (4x10=40)**

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் கட்டுரை வடிவில் விடை தருக.**

**(பதினாறாவது கேள்விக்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும்) (K4 /K5)**

16. “சங்க இலக்கியம் - சூழல் இலக்கியம்” எனும் கூற்றினை நிறுவுக .

17. நற்றிணையில், குறிஞ்சித்திணைப் பாடல்களின் கருத்துகளைத் தொகுத்துரைக்க.

18. முல்லைக்கலியின் சிறப்புகளை “கொல் ஏற்றுக் கோடு அஞ்சுவானை மறுமையும் புல்லாளே
ஆய மகள்” எனும் பாடல்வழி தொகுத்துரைக்க.

19. சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையின் சிறப்புகளைக் குறுங்கோழியூர் கிழாரின் புறப்பாடல் வழி விளக்குக.

20. பதிற்றுப்பத்தில், மூன்றாம் பத்தின் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

21. திருமாலின் பெருமை, ஊழிகளின் தோற்றம் ஆகியவற்றைப் பரிபாடல் வழி ஆராய்க.

**********************

ETHICAL PAPER